# ஹெல்மெட்



# ஜாங்கிட் அமைத்த நூதன போலீஸ் டீம்!

ராம்ஸ்

சுங்க இலாகா அதிகாரி சாம்சனை துடிக்கத் துடிக்க வெட்டிக் கொன்ற பவுலினா கும்பலை விரட்டிப் பிடித் திருக்கிறது சென்னை புறநகர போலீஸ்.

சாம்சனும் அவரது மனைவி ஜெயராணியும் காதல் திரும ணம் செய்து கொண்டவர்கள். இருவரும் சுங்க இலாகாவில் உள்ள கார்கோ பிரிவில் பணிபுரிவதால் வசதியான வாழ்க்கை நடத்தி வந்த னர். சென்னை, ஆதம்பாக்கம், ஆஃபிஸர்ஸ் காலனி 5-வது தெருவில் வசித்து வந்த இவர்களுக்கும், அதே பகுதியில் வசித்து வந்த பவுலினாவிற் கும் பெரும் மோதல் வெடித்தது.

மோதல் வெடித்ததற்கு முக்கியக் காரணம், சாம்சன் கட்டிக் கொண்டிருந்த புது வீட்டால்தான். பங்களா மாடலில் கட்டிய அந்தப் புது வீட்டிற்காக அடிக்கடி கல், மண், சிமெண்ட் என்று எடுத்துச் சென்று கொண்டிருந்தார் சாம்சன். அப்படி வாக னங்கள் செல்வதில் அடிக்கடி பவுலினாவிற்கும், சாம்சனுக்கும் தகராறு வெடித்து வந்தது. கார் நிறுத்துவது தொடர்பாகவும் கலாட்டா நடந்து கொண்டிருந்தது. இது நாளடைவில் பெரும் ஈகோவாக மாறியது.

“என் வீட்டு வழியாக வண்டிகளைக் கொண்டு வரக் கூடாது’ என்று தடை யுத்தரவே போட்டார் பவுலினா. சாம்சனோ டீசன்டான அரசு அதிகாரி. பவு லினாவோ லோக்கல் ‘தாதா’ போல் வலம் வந்தவர். 1980 மற்றும் 1990 களில் சாராயம், கஞ்சா என்று பல்வேறு விவகாரங்களைக் கையில் எடுத்து தொழிலில் சூப்பராக வலம் வந்தவர். சென்னை புறநகரப் போலீஸ் கமி ஷனரகம் அமைந்த பிறகு இந்த விவகாரங்கள் எல்லாம் எடுபட வில்லை. அதனால் வேறு மாதிரி லோக்கல் தாதா போல் அங்குள்ள வர்களை மிரட்டி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். அடிக்கடி சாம்சனுக்கும், பவுலினாவிற்கும் ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் புகார் வரும். அப்போதெல்லாம் வழக்குகள் போட்டுள்ளார் கள்.

பழிக் குப் பழி வாங்கும் கொலைகள் இப்போதெல்லாம் திடீர் திடீரென்று அரங்கேறுகின்றன. ஆனால் சென்னை புறநகரப் போலீஸ் கமிஷனர் ஜாங்கிட் இது மாதிரி கொலைகளைத் தடுக்க நூதன முயற்சி களை எடுத்து வருகிறார். குறிப்பாக இதற்காக தனி போலீஸ் டீமை அமைத்து இது போன்ற கொலைகள் நடக்காதவாறு தடுத்து வருகிறார். இந்த டீம் எடுத்த துரித நடவடிக்கையால் சென்னை புறநகரில் சமீபத்தில் மட்டும் இரு பழிக்குப் பழி வாங்கும் கொலைகள் தடுக்கப்பட்டுள்ளன. முதலில் மாதவரம் வீர மணியைக் கொலை செய்தவர்களை தீர்த்துக் கட்ட அவரது மனைவி திட்டம் போட்டார். அத்திட்டத்தை முறியடித்து, அந்த கேங்கை பிடித்து உள்ளே போட்டது ஜாங்கிட் தலை மையிலான போலீஸ் படை. இப்போது இரண்டாவதாக பெருங்களத்தூரில் அது மாதிரி ஒரு பழிக்குப் பழி வாங்கும் கொலைத் திட்டத்தை முறியடித்திருக்கிறது புறநகரப் போலீஸ்!

பெருங்களத்தூரில் இருக்கிறது ராம்ராஜ் நகர். இங்கு இரு கோஷ்டிகளுக்குள் அடிக்கடி மோதல். யார் கேங் லீடராவது என்பதில் அந்த ரெளடி கோஷ்டிகளுக்கு இடையே அடிதடி, வெட்டுக் குத்து என்று நிலவியுள்ளது. இதனால் ஒரு கொலை வழக் கில் இப்பகுதியில் இருந்த பிரபல ரெளடிகளான சூர்யா, உதயா